நேரத்திலேதான் அறிஞர் அண்ணா அவர்கள் என்னைப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினராக அனுப்பினார்கள். அதைப் போலவே இங்கே பல பேர்— எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த இளைஞர்கள் வந்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்வதற்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே பத்திரிகை நிருபர்கள் இந்த அவையிலே ஒரு அங்கமாக இருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே அவர்கள் அமர்ந்திருந்தாலும் அவர்கள் செய்கின்ற சேவை ஒரு மகத்தான சேவை. மரபு கெடாமல் சபையினுடைய நடவடிக்கைகளை எப்படி அவர்கள் பிரசுரிக்க வேண்டுமோ அப்படிப் பிரசுரித்து இந்தச் சபையினுடைய மரபை, சபையினுடைய பாரம்பரியப் பெருமைகளை கட்டிக் காக்க வேண்டுமென்று நான் அவர்களை யெல்லாம் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பொறுப்பினை இன்றைக்கு ஏற்றுக்கொள்ளும் நேரத்தில், நான் இதுவரையிலே சார்ந்திருந்த கட்சியை மறந்து பணியாற்ற வேண்டுமென்பதை நீங்களெல்லாம் எனக்கு எடுத்துச் சொன்னீர்கள். அப்படிப்பட்ட பெரும் பொறுப்புடைய பதவிதான் இது என்பதை நான் நன்றாக அறிந்தவன். நான் இந்தப் பொறுப்பிலே இருக்கின்றவரையில் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவனாக, எல்லோருக்கும் நடுநிலையாக இருந்து பணியாற்றுவேன் என்பதை மட்டும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் அனைவரும் என்னை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தமைக்காக நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றிகூறி அமர்கிறேன். வணக்கம்.

TRUTH ALONE TRIUMPHS

4. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 256(1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1980-81 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்.
2. மாண்புமிகு முதல் அமைச்சர்.

1980 ஜூன் 21] [பேரவைத் தலைவர்]

3. மாண்புமிகு பேரவை முன்னவர்.

4. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

6. திரு. ஆர். மணிமாறன், தலைமை அரசு கொறடா.

7. திரு. மு. கருணாநிதி, எதிர்க்கட்சித் தலைவர்.

8. திரு. க. அன்பழகன்.

9. திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்,

10. திரு. என். சங்கரய்யா.

11. திரு. சோ. அழகர்சாமி.

12. திரு. குமரி அனந்தன்.

13. திரு. ப. நெடுமாறன்.

14 திரு. எஸ். ஆண்டித்தேவர்.

15. திரு. பி. முகமது இஸ்மாயில்.

16. திரு. கி. சட்டநாத கரையாளர்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.

(பிற்பகல் 12-30)

5. தகவல் கோரல்.

வினா-விடை நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வந்து, அவை அனுமதிக்கப்பட்டு, துறைகளுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. விடைகள் வருவதற்குக் காலதாமதம் ஆகும். காலையிலே வினா-விடை நேரம் 9 மணியிலிருந்து 10 மணி வரை இருப்பது வழக்கம். நாளை மறுதினத்திலிருந்து வினா-விடை நேரம் தேவையில்லை. கொஞ்ச காலம் கழித்து, வினா-விடை நேரம் வைத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றி, இங்குள்ள கட்சிகளின் தலைவர்களுடைய கருத்துக்களை அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS